தொகுதி 1
சித்திரம் 13

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்



# விதியின் கணக்கு

www.ponnivala.com

© 2012 Ponnivala Publishing







மறுவர்ணனை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்
© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.

பகுதி-1
சித்திரம்-13

## வரம் பெற்றாள் தாமரை

குழந்தை வரம் வேண்டி கைலாய மலைக்கு பல இன்னல்களையும், தடைகளையும் தாண்டி வந்த தாமரை, தவசு கம்பத்தின் மேல் ஊசி முனைகளில் நின்று, தன் இருபத்தியொரு வருடத் தவத்தை தொடங்கினாள். சிவனால் பல வழிகளிலும் கடுஞ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, இறுதியில், அவளது கடுந்தவத்தை கண்டு மனமிறங்கிய சிவன் அவளுக்கு குழந்தை வரத்தை அருளினார்.














செல்லாத்தா குன்னுடையானையும், தாமரையையும் நினைத்து கவலைப்பட்டாள்...
குன்னுடையானும், தாமரையும் தெய்வசபையில் தவம் செய்வதற்காக நெடுந்தூரப் பயணம் செய்து சென்றுள்ளனர்.
அவர்கள் அங்கே செல்வது சுலபமன்று.
கல்லாறு, முள்ளாறு, நெய்யாறு மற்றும் நெருப்பாறுகளை கடந்து சென்று, அந்த இடத்தை அடைந்தால்...
தவம் செய்ய முடியும். அப்பொழுது தான் அவர்களின் சாபம் நீங்கும்.
குன்னுடையான் இப்பொழுது கல்லாக மாறி விட்டார். தாமரை இருபத்தியொரு வருட தவத்தை செய்யப் போகிறாள்.
அடுத்து என்ன நடக்குமோ! சிவனின் மனம் தான் இறங்குமா?


விஷ்ணுவும் தாமரையும்,நெடுந்தூரப் பயணத்தின் முடிவில், தவம் செய்யும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.
தாமரை! அங்கே தெரிகிறது பார் அது தான் தவசு மரம்.
அதற்குள் காவி உடை, உருத்ராட்ச மாலை மற்றும் விபூதியும் இருக்கிறது.
நீ சென்று அவைகளை அணிந்து வா.
தாமரை அம்மரத்தினுள் சென்று உடைகளை மாற்றிக் கொண்டாள்.


உருத்ராட்ச மாலையை உன் கழுத்தில் அணிந்து கொள்.
விபூதியை உன் உடலெங்கும் பூசிக்கொள்.
தாமரை இந்தக் கம்பத்தின் மேல் ஏறு.
கம்பத்தின் உச்சியில் ஏழு ஊசிகள் இருந்தன. ஊசி முனை ஒவ்வொன்றிலும் பூ பூத்திருந்தது.


விஷ்ணு, தாமரையை ஊசியின் முனைகளில் நிற்க வைப்பதற்காக தன் சக்தியை பயன்படுத்தினார்.
நீளமான, தாமரையின் முடிகளை நான்கு புறமும் நிலத்தில் ஒட்டிக் கொள்ளும் படிச் செய்தார்.
தாமரை! இப்பொழுது உன் இருபத்தியொரு வருடத் தவத்தை ஆரம்பிக்கலாம்.
உன் தவம் நிறைவடைந்ததும், நான் உன்னை வந்து சந்திக்கிறேன்.
விஷ்ணு அங்கிருந்து சென்றதும், தாமரை தன் தவத்தை தொடங்கினாள்.


இருபத்தியொரு வருடங்கள் கடந்து, தவம் முடியும் வேளையில், தாமரையின் மூக்கில் கூடு கட்டி வாழ்ந்த ஒரு ஜோடிக்கிளிகள் தமக்குள் பேசிக்கொண்டன.
நாம் இங்கே பல வருடங்களாக நலமாக வாழ்ந்து வருகிறோம்.
தாமரையின் தவம் நிறைவடையும் வேளையும் வந்து விட்டது.
அதனால், இனிமேல் இங்கே இருப்பது முடியாத காரியம். எங்காவது செல்ல வேண்டும்.
எங்கே செல்வதென்று, எனக்கு தெரியவில்லையே?
சிவன் தாமரையின் தவத்தில் மகிழ்ந்து கட்டாயம் வரம் அளிப்பார்.

தாமரை தவம் செய்ய ஆரம்பித்து இருபத்தியொரு வருடங்கள் முடிவடைந்து விட்டது.




விஷ்ணு, தாமரையிடம் வந்தார்.
ஆ..! விஷ்ணு!
நீங்கள் இனிமேல் இங்கே இருக்க முடியாது.
பூமிக்கு சென்று, வீரப்பூரில் வேட்டுவகுல அரசரின் தங்கையான, வீரதங்காளிடம் தஞ்சமடையுங்கள்.
அதைக் கேட்ட கிளிகள் பூமியை நோக்கி பறந்து சென்றன.


விஷ்ணு தாமரையின் மேல் கங்கைநதியின் புனித நீரை தெளித்து, அவள் நீண்ட தவத்தை களைத்தார்.
நான் எங்கிருக்கிறேன்? என் கணவர் எங்கே?
என் குழந்தைகள் எங்கே?
தாமரை! நன்றாக சிவனை வேண்டிக்கொள்.
விஷ்ணு தன் சக்தியினால் தீயை உருவாக்கினார்.




அவர் உருவாக்கிய தீ நாக்குகள், காட்டில் தவம் செய்து கொண்டிருந்த சிவனை தீண்டியது.




தீ நாக்குகளின் உக்கிரத்தால், தவம் களைந்து எழுந்த சிவன் கடுங்கோபங் கொண்டார்.




சித்திரகுப்தா! இங்கே என்ன நடக்கிறது?
என்னை தீ நாக்குகள் தீண்டிச் சுடுகின்றனவே.
சுவாமி! யாரோ ஒரு பெண் தெய்வசபையில் கடுந்தவம் புரிகிறாள்.
அவளைப் பிடித்து நரகத்தில் தள்ளுங்கள்.
தாமரை நரகத்தில் கொடுமையாக வதைக்கப்பட்டாள்.
விஷ்ணு அதைப் பார்த்து வருந்தினார்.



அதேநேரம், அந்த கிளிகள் இரண்டும் வீரப்பூரை அடைந்து, வேட்டுவகுல அரசரின் தங்கையான வீரதங்காள் முன் நின்றன.
ஆ! எவ்வளவு அழகான கிளிகள்!
எங்கிருந்து வருகிறீர்கள்?
தாயே! நாங்கள் தெய்வசபையில் இருந்து வருகிறோம்.
பொன்னிவள நாட்டின், தாமரை கவுண்டச்சி இருபத்தியொரு வருடங்கள் தெய்வசபையில் கடும்தவம் செய்யும் போது..
அவர்களின் மூக்கில் கூடுகட்டி சுகமாக வாழ்ந்து வந்தோம்.
ஆ.. அப்படியா! என்ன ஆச்சர்யம்!
தற்போது தாமரையின் தவம் நிறைவடைந்து விட்டது.
எனவே, விஷ்ணு எங்களை தங்களிடம் செல்லுமாறு கூறினார்.
தயவு செய்து எங்களுக்கு தஞ்சமளியுங்கள் தாயே!
வேட்டுவஅரசி அந்த கிளிகளுக்கு உதவ தாயாரானாள்.




சரி! நான் சொல்வதைக் கவனமாக கேளுங்கள்.
வீரமலைக்கு மறுபக்கம் உள்ள மதுக்கார வனத்தில் வெள்ளியங்கிரித் தடாகம் ஒன்று இருக்கிறது.
அங்கே ஒரு பெரிய ஆலமரம், ஆயிரம் கிளைகளுடன் இருக்கிறது. நீங்கள் அங்கே பயமில்லாமல் வாழலாம்.
அங்கு வேறு ஏதேனும் கிளிகள் வசிக்கிறதா?
ஆம்! அங்கே பல கிளிகள் கூடுகட்டி சந்தோஷமாக வாழ்கிறது.
அங்கே உங்களை பாதுகாக்க முதல் வனத்தில் ஐயாயிரம் வேங்கைகளையும் ...
அடுத்த வனத்தில் ஐயாயிரம் ராஜ நாகங்களையும் காவலுக்கு நிறுத்துகிறேன்.
உங்களை யாரும் துன்புறுத்த மாட்டார்கள்.
மிக்க நன்றி! தாயே! நாங்கள் அங்கே மகிழ்ச்சியாக இருப்போம்.
கிளிகள் புதிய இருப்பிடத்திற்கு வந்தடைந்தன.



சிவன் வழங்கிய ஏழு தலைமுறைகளுக்கும் குழந்தையில்லா கொடுஞ் சாபத்தை போக்க தாமரை பல துன்பங்களையும் அனுபவித்தாள்.
ஆ...!!!!
தாமரையை, நரகத்தில் மிகவும் கொடுமைப்படுத்தினர்.
ஓ!...
காப்பாற்றுங்கள்!
ஓ விஷ்ணு!


தாமரைக்கு வரம் கிடைப்பதற்காக, விஷ்ணு அக்கினியை மீண்டும் மீண்டும் ஏவி, சிவனின் கவனத்தை, அவளை நோக்கி திருப்பினார்.
என்னை மீண்டும் தீ நாக்குகள் சுடுகின்றவே!..
சுவாமி! அந்த பெண் தான் மீண்டும் தவம் புரிகிறாள்.
எமனின் சேவகர்களை அனுப்பி, அவளின் தலையை வெட்டச் சொல்லுங்கள்.
யாரங்கே!
சேவகர்களே! அந்தப் பெண்ணின் தலையை வெட்டி கூடையில் போட்டு,
அதை சிவனின் தெய்வசபை வாயிலில் உள்ள தூணின் மேல் வைத்து விடுங்கள்.
உத்தரவைக் கேட்ட சேவகர்கள் தாமரை தவம் செய்யும் இடத்திற்கு பறந்து சென்றனர்.



தவத்தில் இருந்த தாமரையின் தலையை, அவர்கள் வெட்டி எடுத்துச் சென்றனர்.
தலையை கூடையில் இட்டு தூணில் மேல் வைத்தனர்.


இனிமேல், என்னால் தாமரையை காப்பாற்ற முடியது. தங்கை பார்வதியிடம் சென்று உதவி கேட்போம்.
யாரது? அண்ணாவா!
பார்வதி! எனக்கு உன் உதவி வேண்டும்.
பல வருடங்களுக்கு முன் நீ ஒன்பது காராளர்களை உருவாக்கினாய்.
அதில் மூத்தவருக்கு உன் கணவர் சாபம் கொடுத்தார் அல்லவா?
அந்த சாபம் குன்னுடையானையும், தாமரையையும் வாட்டி வதைக்கிறது.
ஆ!.. அப்படியா.
தயவுசெய்து சிவனிடம் தாமரையின் சாபத்தை போக்கும்படி நீ சென்று கேட்க வேண்டும்.
அப்படியே செய்கிறேன்!


நாதா!
என் அண்ணனுக்காக ஒரு உதவி கேட்டு வந்துள்ளேன்.
அவரே என்னிடம் கேட்டிருக்கலாமே!
சரி! என்ன உதவி வேண்டும்?
தயவுசெய்து தாமரையின் சாபத்தை நீக்கி...
அவளுக்கு குழந்தை வரம் அருளுங்கள்.
அவள் குடும்பம் குழந்தையில்லா சாபத்தை பெற்றிருக்கிறது.
கருணை கொண்டு! தாமரைக்கு வரமளியுங்கள்.
சரி!.. உனக்காக செய்கிறேன்.
விஷ்ணுவை வரச் சொல்.


விஷ்ணு, சிவனை தெய்வசபையில் சந்தித்தார்.
மைத்துனரே!
உதவி தேவை என்றால், என்னிடம் வர வேண்டியது தானே!
உங்கள் வரத்தால் பிறந்த தாமரைக்கு, நீங்கள் செய்த சோதனைகள் மிகக் கொடுமையானவை.
வரம் பெறுவதொன்றும் இலகுவான காரியம் அல்ல.
அவள் தனது ஆறு பிறவிக்கான சாபத்தையும் அனுபவித்து விட்டு..
ஏழாம் பிறவியின் சாபத்தை நிவர்த்தி செய்ய காத்திருக்கிறாள். அவளுக்கு இரக்கம் காட்டுங்கள்.
சரி! ஆகட்டும். தூணின்மேல் இருக்கும் அவளின் தலையை எடுத்துச் செல்லுங்கள்.



தாமரை மீண்டும் உயிர் பெற்றாள்.
சுவாமி! என் பிள்ளை வரம் எங்கே?
தாமரை! நாம் சிவனிடம் செல்வோம் வா.
தெய்வ சபையில் தாமரை...
சர்வேஸ்வரா! என் சந்தோஷத்திற்கு அளவே இல்லை.
நான் பட்ட கஷ்டமெல்லாம் வீண் போகவில்லை.
தாமரை! நீடுழி வாழ்வாயாக!



லோக மாதாவே! நீங்களும் என்னை ஆசீர்வதிக்க வேண்டும்.
தாமரை அனைவரையும் வணங்கி, தன் வரத்தை கேட்கத் தொடங்கினாள்.
தாமரை! என் ஆசீர்வாதம் எப்பொழுதும் உனக்கு உண்டு.
சரி! உனக்கு வேண்டிய வரங்களை கேள்.
பரமேஸ்வரா!
என் குலம் தழைக்க பலசாலியான இரண்டு ஆண் குழந்தைகள் வேண்டும்.
சித்திர புத்திரா! பூலோக ஏட்டை பார்த்துச் சொல், தாமரையின் வரத்திற்கு பெறுத்தமானவர்கள் யாரென்று?


சுவாமி! பஞ்சபாண்டவர்கள் ஐவரில்...
பீமனும், அர்ச்சுனனும், மிகப் பொறுத்தமானவர்கள்.
இருவரும் பன்னிரெண்டு யானையின் பலம் கொண்டவர்கள்.
நல்லது! அவர்கள் இருவரின் உயிரையும் தாமரையின் வயிற்றில் கருவாக்குகிறேன்.


தாமரை! மேலும் என்ன வரம் வேண்டும்?
மனை சிறக்க, ஆசைக்கு ஒரு மகள் வேண்டும்.
அவள் மார்பில் அக்னிச் செண்டுடன் இருக்க வேண்டும்.
சித்திர குப்தா! மீண்டும் ஏட்டை பார்த்து செல், எந்த பெண்ணின் மார்பில் அக்னிச் செண்டு இருக்கிறது என்று.
சுவாமி! தெய்வ சபையில் உள்ள ஏழு கன்னிகளில், இளைய கன்னியின் மார்பில் அக்னிச் செண்டு இருக்கிறது.
நல்லது! அந்த ஏழாவது கன்னியை இங்கே அழைத்து வா.
பெண்ணே! பூலோகத்தில் சில காலங்கள் தங்கி இருக்க வேண்டும்.
நீ தாமரையின் வயிற்றில் குழந்தையாக பிறந்து, உன் காலம் முடிந்ததும்...
தெய்வசபைக்கு வந்து சேர்வாய்.



சித்திரபுத்திரா!
இவர்கள் மூவருக்கும் ஆயுளாக நூற்றியிருபது வருடங்கள் என்று எழுதிக்கொள்.
மைத்துனரே!
அவர்களுக்கு எத்தனை வருடங்கள் ஆயுளாக எழுதச் சொன்னீர்கள்?
நூற்றியிருபது வருடங்கள்!
இவர்களை அவ்வளவு காலம் பூமாதேவியால் தாங்க முடியாது.
அவர்களுக்கு பதினாறு வருடங்கள் ஆயுளாக கொடுத்து விடுங்கள்.
நல்லது! அப்படியே வழங்குகிறேன்.
தாமரை! வேறு என்ன வரம் வேண்டும்.



கைலை நாதா!
பொன்னிவள நாட்டில் ஒரு ஏழைப் பெண் இருக்கிறாள்.
அவளுக்கும் ஒரு ஆண் குழந்தை வரம் வேண்டும்.
அந்தக் குழந்தைக்கு பதினாறு யானையின் பலம் இருக்க வேண்டும்.
சுவாமி!
மகாபாரதத்தில் வரும் துரோணாச்சாரியின் மகன் அஸ்வத்தாமனிடம் பதினாறு யானை பலம் இருக்கிறது.
நல்லது! கொண்டு வாருங்கள்.
சிவன், அஸ்வத்தாமாவின் உயிரை தங்கச்சிமிலில் அடைத்தார்.


தாமரை, அரண்மனையின் நாய் மற்றும் குதிரைக்கும் குழந்தை பாக்கியம் பெற வரம் கேட்டாள்.
பொன்னிவளாவில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் குழந்தை வரம் அருளும் படி கேட்டாள். சிவன், தங்கபாத்திரத்தில் கங்கையின் புனித தீர்த்தத்தை நிரப்பி, அதை “யார் பருகினாலும் அவர்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும்” என கூறி,தாமரையிடம் கொடுத்தார்.



விஷ்ணு!
நீ அடிக்கடி பூலோகம் சென்று யாராவது ஒருவரை கூட்டிவந்து, என்னை தெந்தரவு செய்கிறாய்.
கஷ்டப் படுபவர்களுக்கு உதவி செய்வது நமது கடமையல்லவா!
இதற்கு ஒரு வழி செய்கிறேன்.
உங்களது வலம்புரிச் சங்கும், கோபாலப் பெட்டியும் என்னிடம் இருக்கட்டும்.
தாமரையின் குழந்தைகளுக்கு பதினாறு வயது ஆனதும், அவர்களின் உயிரை என்னிடம் சேர்த்து விட்டு...
இவற்றை திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள்.
விஷ்ணு வலம்புரிச் சங்கையும், கோபாலப் பெட்டியையும் சிவனிடம் கொடுத்தார்.
அதன் பின் தாமரையை அழைத்துக் கொண்டு பூமிக்கு திரும்ப தொடங்கினார்.



நாதா!
நாதா!
இருவரும் குன்னுடையான் சிலையாக இருந்த இடத்திற்கு வந்தனர்.
பரந்தாமா! என் கணவருக்கு உயிர் கொடுத்து..
அவரை எழுந்திருக்கச் செய்யுங்கள்.
விஷ்ணு தன் சக்தியை பயன்படுத்தி, குன்னுடையானுக்கு உயிர் கொடுத்தார்.
நம் குழந்தைகள் எங்கே?
தாமரை! நான் எங்கிருக்கிறேன்.
என் இருபத்தியொரு வருடத் தவம் நிறைவடைந்து, சிவன் எனக்கு வரம் அளித்துள்ளார்.
குழந்தைகள் என் வயிற்றில் கருவாக உள்ளனர்.
நம் அரண்மனைக்குச் சென்று, அவர்கள் பிறக்கும் வரை பெறுமையாக காத்திருக்கலாம்.
தாமரை! கணவனை அழைத்துக் கொண்டு செல்.
வனத்தின் முடிவில் உங்களை சந்திக்கிறேன்.


குன்னுடையானும், தாமரையும் நெருப்பாற்றை நோக்கி புறப்பட்டனர். வழியில், நாகத்தை சந்தித்து, அதற்கு சிவன் வழங்கிய தீர்த்தத்தை கொடுத்து விட்டு சென்றனர்.
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
தாமரை! எனக்கு வரம் வாங்கி வந்தாயா?
ஆம்!
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்...
இந்த தீர்த்ததில் சிறிது அருந்தினால், உனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
இருவரும் காட்டின் முடிவில் விஷ்ணுவை சந்தித்தனர்.
விஷ்ணு, அவர்களை மறுபடியும் ஈயாக மாற்றி, நான்கு ஆறுகளையும் கடக்க உதவினார்.


ஆறுகளை கடந்து முடித்த இருவரும், விஷ்ணுவிற்கு நன்றி சொல்லிவிட்டு புறப்பட்டனர்.
காடு, மலைகளைக் கடந்து, நீண்ட தூரம் நடந்து, பொன்னிவள நாட்டை வந்தடைந்தனர்.


பொன்னிவள நாட்டின் குடிமக்கள் அனைவரும், அவர்களை வரவேற்க விநாயகர் கோவிலின் முன்பாக கூடியிருந்தனர்.
அனைவருக்கும் நல்லதே நடக்கட்டும்!
எங்களுக்கு வரம் வாங்கி வந்தீர்களா?
ஆம்! அனைவருக்கும் வேண்டி வந்துள்ளேன்.
தாமரை புனித தீர்த்தத்தை ஒவ்வொரு பெண்ணிற்கும் கொடுத்தாள்.


பின் அவர்கள் தமது அரண்மனைக்குத் சென்றனர்.
விஷ்ணுவே!
அரண்மனையை காவல் காத்த வண்டுகளை திரும்ப அழைத்துக் கொள்ளுங்கள்.
விஷ்ணு தாமரையின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார்.
பணிப்பெண்களே!
நாங்கள் திரும்பி வந்ததைக் கொண்டாட வேண்டும். அரண்மனையை சுத்தப்படுத்தி, அலங்கரியுங்கள்.
பணிப்பெண்கள், தாமரை கூறிய படி செய்தனர். அதனால், அரண்மனை மீண்டும் அழகானது.




தாமரையும், குன்னுடையானும் தாம் சென்ற காரியத்தில் வெற்றியடைந்து, தமக்கு மட்டுமில்லாமல் ஊரில் அனைவருக்கும் வரம் வாங்கி, மீண்டும் பொன்னிவள நாட்டிற்கு வந்துள்ளனர். இதனால், அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். விரைவில், மூன்று உயிர்களை பிரசவிக்க உள்ள தாமரைக்கு அனைத்தும் இனிதே நடக்குமா?, இல்லை வரம் பலனளிக்காமல் போய்விடுமா?



# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்பூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic13tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியின் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com


ISBN 978-1-927093-54-2
90000 >
9 781927 093542



© 2012 Ponnivala Publishing